


# பசி உறு நிலம்

வில்வரசன்

# பசி உறு நிலம்

வில்வரசன்

**பசி உறு நிலம்**

(கவிதைகள்)

வில்வரசன்

முதற்பதிப்பு: 2023 மாசி

© வில்வரசன்

அட்டை வடிவமைப்பு : வி.விமலாதித்தன்

வடிவமைப்பு: க.பரணீதரன்

வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்

பக்கம்: 52

விலை: 300.00

அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

**Pasi uru nilam**

(Collection of Poems)

Vilvarasan

First Edition: 2023 February

©Vilvarasan

Cover designed by V.Vimalathithan

Designed by K.Bharaneethara

Published by Jeevanathy, Kalai aham, Alvai

Pages: 52

ISBN: 978-624-5881-82-6

ஜீவநதி வெளியீடு – 262

இந்நூல்
கனவுகளுடன் காத்திருக்கும்
ஒவ்வொரு சிறுவர் இல்லக்
குழந்தைக்கும்!

## உள்ளே...

1. குருசேத்திர நாட்கள்
2. வெயில் குளிக்கும் தலைகள்
3. வேள்வி
4. மகளீர் மட்டும்
5. பனிக் குல்லாய்
6. தனிமையின் வல்லமை
7. நாடடொன்றின் ஒப்பாரி
8. முகமூடி மனிதன்
9. மனமெனும் தொட்டி
10. நாங்கள்
11. சுயம்தேடல்
12. நானும் அவனும்
13. விடுதிக்காரனின் டயறி
14. காணாமல் போனவர்கள்
15. சுதந்திரம்
16. ஒரு பக்க நியாயம்
17. விடைபெறு படலம்
18. முற்றத்து முருங்கைமரம்
19. மீட்பர்கள்
20. கண்ணீர்க்கனவு
21. சுதந்திரப்பறவை
22. தேனூறிய சொற்கள்
23. ஊழி மீனின் வாழ்வு
24. குழந்தைகளின் வானம்
25. மாஜி யூனியர்
26. பாவம் சுமத்தல்
27. மழைக்காலம்
28. மாறுதல்
29. எனது கிளியின் கடைசி இரவு
30. சுந்தரன் வருவனோ?
31. கனவில் உதிரும் வாழ்வு
32. சுவரும் குழந்தைகளும்
33. தீபாவளிக் குறிப்புகள்
34. விமோசனம்
35. நிறைசூல் உண்டியல்
36. ஒரு நாட் பூ
37. சிறுவர்தினத்தன்று

# மின்மினிச் சொற்களின் ஒளிச்சிதறல்

அனைவரையும் போலவே சராசரி மனிதனான கவிஞன், தன் அனுபவங்களை வார்த்தைகளுக்குள்ளே சிறைப்பிடிக்கும் சித்துத் தெரிந்தவன். இதனால் பிறர் அனுபவங்களெல்லாம் அவர்கள் வாழ்க்கை மரங்களி லிருந்து உதிர்ந்து போக, கவிஞனின் அனுபவங்களோ இடம்பெயர்ந்து வாசக மனங்களுக்குள்ளே துளிர்க்கத் தொடங்குகின்றன. தன்னைச் சொற்களில் பதியம் வைத்துப் பிறரில் ஊன்றத் தெரிந்த கவிஞனாகத் தன்னை உணருதல் பொதுவாகப் பதின்ம வயதில் எல்லோருக்கும் நேர்வதுதான். எனினும், அந்த உணர்வை வளர்த்து, எரியத் தொடங்கிக் காற்றின் திசைகளெல்லாம் ஆடும் சிறு சுடரை அணையாது கைகள் பொத்திப் பேணி, மென்மெலப் பிரகாசித்து ஒளிரச்செய்யும் பேரவாவும் ஆற்றலும் ஒரு சிலரிடம்தாம் காணப்பெறுகின்றன. அந்தச் சிலருள் ஒருவ ராக சொற்களின் சபையில் பருவமடைந்த தன்னைக் காண்பிக்கிறார் வில்வரசன். இது வில்வரசனின் முதலாவது கவிதைத் தொகுப்பு, அவரை என் வகுப்பில் அமரும் மாணவனாகத் தான் முதலில் நான் அறிவேன். இளம் பேச்சாளராகவே பல்கலைக்குள் அவர் தொடக்கத்திலே முகங்காட்டினார். பின் மென்மேலும் அவரது கவிதை முகம் மலரத்தொடங்கி யது. சமூக வலைத்தளங்கள் அம்முகம் காட்டும் கண்ணாடிகளாயின.

போரின் கலப்பை உழுது, மறுத்துழவு செய்த நிலத்துக்குச் சொந்தக்காரன் வில்வரசன். அது “செம்”:புலப் “பெயல்” நீராலும் கண்ணீராலும் வளமனைத்தும் தொலைத்த மண். இன்று வியர்வையால் முன்னை இழந்த பெருமையை மீளப்பெறத் துடிப்பதொரு மண். இந்த மண்ணின் சாட்சியாகத் தன் தமிழைத் தருகிறார் இக் கவிஞர். இன்று இவர் நிற்பது, நடப்பது எல்லாம் பேரா

தனை எனும் குறிஞ்சியிலேதான். வளமார் குறிஞ்சியில் வாழ்வுறினும் கவிஞனைத் தொடுகிறது போர்ப்பாலையான பசியுறுநிலம்.

பதின்ம வயதில் கவிதையைத் தன்னுள்ளே கண்டெடுக்கும் எவரும் காதலின் வயிற்றில் கவிதை கருக் கொள்வதாகவே நம்புகின்றனர். இதனால் எந்தவொரு இளங்கவியின் முதலாவது தொகுப்பிலும் காதல் மலர் களின் வாசம் சற்றே அதிகம்தான். ஆனால், வில்வரசன் இதிலிருந்து வேறுபடுவதால் அவரது இத்தொகுப்பில் பிரதான பேசுபொருள் அவன், அவள், அது எனும் சமூகமும் “நான்” எனும் சுயமுமே.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காத்துக்கிடப் போரின் கண்ணீர், புரட்சிப் பெண்கள் மூட்டும் அக்கினி, உணவுக்காகச் சுதந்திரத்தைத் தொலைத்த நாட்டின் ஒப்பாரி, காலிமுகத்திடலில் காட்டப்படும் கறுப்புக்கொடி, காணாமல்போனோர் முகம் காட்டும் கார்த்திகை மலர், கயிறறுந்த சுதந்திரத்தேர் என்ற இவற்றின் பேரலையில் ஆங்காங்கேதாம் தென்படுகின்றன காதலி பரிசளித்த பனிக்குல்லாயும் தேனூறிய சொல்லும். இத்தன்மைதான் ஏனைய இளங்கவிஞர்களிடமிருந்து வில்வரசனைப் பெரிதும் வேறுபடுத்துகின்றது.

பயிலும் பல்கலைக்கழக மாணவர் இவர். எனவே, இக்காலகட்டத்து அனுபவங்களும் தொகுப்பில் பூத்தல் இயல்பே. அம்மலர்கள்தாம் மாணவ யூனியரும், விடுதிக் காரனின் டயரியும். மேலும் தமிழின் சிறப்புக்கலையில் கற்றுவரும் இலக்கியப் பரிச்சயத்தில் மலர்ந்தவையே சுந்தரன் வருவானோ, மகளிர் மட்டும் முதலிய கவிதைகள். கூடவே “தான்” எனத் தான் கருதும் கவிஞனது சுயம் குறித்த கவிதைகள் வாசக மனங்களுக்கு வியப்புத் தருவதையும் சுட்டல் கடன். தனிமையின் வல்லமையை நன்குணர்ந்த கவிஞர் ஏளனப் புன்னகைகளை அலட்சியம் செய்கிறார். இருட்டின் அந்தங்காரத்துள்ளேயும் தன் திசைகளைக் கண்டுபிடிக்கவென மின்மினிச் சொற்களின் ஒளிச் சிதறலோடு பயணிக்கிறார். அந்தப் பயணம் சிறப்புவதாக.

பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன்,
தலைவர்,தமிழ்த்துறை,
கலைப்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்.

# என்னுரை

என் எழுத்துப்பயணத்தில் "பசி உறு நிலம்" எனும் இக் கவிதைத்தொகுப்பு முதன் முயற்சியாகும். இக்கவிதை களின் வார்த்தைகளில் அலங்காரம் இருந்தாலும் உணர்ச்சி களில் உண்மை இருக்கும் என்று நம்புகிறேன். பிரமந்தனாறு - ஜெயந்திநகர் - பேராதனை எனும் மூன்று மையங்களில் நகர்ந்த எனக்கு காலம் பரிசளித்த சிலநினைவுகளை இக்கவிதைகளில் தரிசிக்க முடியும்.

இத்தொகுப்பில் உள்ள பல கவிதைகள் ஏலவே தமிழ்த் துறையின் சங்கப் பலகையை அலங்கரித்தவை. அதுபோல உதயன், வணக்கம் லண்டன், தீம்புனல், தமிழருவி, நுட்பம், ஞானம் மற்றும் உள்ளம் முதலான இதழ்களில் வெளியானவை. செம்மையாக்கம் கருதி சில மாற்றங்களை செய்துள்ளேன்..

எப்பொழுதும் எழுதுவதற்கு துணை நின்ற பெற்றோர் களுக்கும் மகாதேவா சுவாமிகள் சைவசிறுவர் இல்லத்துக் கும் மொழியை அறிமுகம் செய்து வைத்த அதிபர் விக்கினராஜா மற்றும் தமிழ் ஆசிரியர்களான திரு. கிஷ்ண ராஜா, திரு. தமிழவன் திருமதி கலைச்செல்வி, திரு சு.லோகேஷ்வரன் ஆகி யோருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இக்கவிதை தொகுப்பை வெளியிட ஆலோசனையும் ஊக்கமும் வழங்கியவர் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரி யர் கலாநிதி சிறீபிரசாந்தன் அவர்கள் ஆவார். தனது கடுமையான வேலைப்பணிக்கு மத்தியிலும் மிகச்சிறந்த முன்னுரை ஒன்றை இத்தொகுப்பிற்காக வழங்கியுள்ளார். அது போல கவிதைகளை ஒழுங்குபடுத்தியும் செம்மை

யாக்கம் செய்ய வும் வழிபடுத்திய விரிவுரையாளர் ஆன் யாழினி சதீஷ்வரன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

அதே போல எனது கவிதைகளை உடனுக்குடன் பாராட்டி யும் அன்புடன் கருத்தூட்டமிட்டும் தட்டிக்கொடுக்கும் கலாநிதி செல்லத்துரை சுதர்சன் அவர்களுக்கு உளங்கனி நன்றிகள்.

எனது கவிதைகளை பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரிப்பதற்கு உதவி செய்த கவிஞர்களான திரு தீபச் செல்வன், திரு தி.சடகோபன், திரு த.செல்வா ஆகி யோருக்கும் நன்றிகள். அத்துடன் அட்டைப்படத்தை மிக அழகாக வடிவமைத்து தந்த உதவி விரிவுரையாளர் விமலாதித்தன் அவர்களுக்கும் கவிதைகளை தட்டச்சு செய்ய உதவிய கா.ஜோன்கென்றி, கேதீஸ், ந.லாவண்யா ஆகியோருக்கும் குறுகிய காலத்தில் மிக அழகாக பதிப்பித்து தந்த ஜீவநதி பதிப்பகத்துக்கும் திரு. க. பரணீதரனுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

இத்தொகுப்பு ஒரு சாதாரணனின் கனவு. நிச்சயம் வாசகர்களுக்கு நம்பிக்கை தரும் ஒற்றைச் சொல்லை யாவது அவர்களின் வாழ்வில் அடையாளப்படுத்தும் என நம்புகின்றேன்...

**நம்பிக்கையுடன்**

**சர்வேஸ்வரன் வில்வரசன்**

## குருசேத்திர நாட்கள்

குருசேத்திரத்தில்
தலைகளைத் தவிர
அத்தனையும் இழக்கப்பட்டும்
முடிவின்றித் தொடர்கிறது
வாழ்வுக்கான போர்

சில தருணங்களில்
முதுகில் மட்டுமில்லாமல்
மனங்களிலும்
இறக்கப்படுகின்றன
துரோக அம்புகள்..

என் காயங்களில் கொப்பளிக்கும்
நிணங்களின் சூட்டில் சுவையாற்றுகின்றன
எதிரிகளின் கத்திகள் ..

புதைந்து போன என் தேரின் சக்கரங்களை
சிதைத்தழித்துவிடவென்று
முன்னேறுகின்றன
கொடுங்கரிகள்...
ஓ !
இப்போதுதான்
ஞாபகம் வருகிறது

யுத்தம் ஆரம்பித்து
இருபத்துநான்கு
வருடங்களாகியும்
இன்னமும்
ஒலிக்கவில்லை
எனக்கான கீதை மட்டும்.

## வெயில் குளிக்கும் தலைகள்

சூரியன் கோபிக்கத்
தொடங்கிய காலையொன்றில்
சப்தமிட்டபடி அணிவகுத்தனர்
சனங்கள்..

மகாவலியிலும்
நீளமாய் நின்ற மக்களுக்கு
தேவையாய் இருந்தது
எரிபொருள் மட்டும்தான்.

முதலில் அட்டைகளுக்கு மட்டும்
அனுமதி என்றனர்
பின்னர் இலக்க முறைக்கு
ஏற்பாடு என்றனர்..

எல்லா ஏற்பாடுகளும்
வாய்ப்பாய் அமைந்தது
இடைத்தரகர்களுக்கும்
இடைநுழைபவர்களுக்குந்தான்

இரவுகள் பகல்களானாலும்
பகல்கள் இரவுகளானாலும்
நிரப்பு நிலையங்கள் மட்டும்
நிரம்பி வழிகின்றன
காத்துக் கிடப்பவர்களின்
கண்ணீரால்...

## வேள்வி

மந்திரங்களின் சப்தத்தில்
பாவங்களை
எரிப்பதற்காய்
ஊற்றப்படுகின்றன
நெய்க் குப்பிகள்

புண்ணிய நதிகளின்
சிறு துளிகளைத் தெளித்தபடி
தொடர்கிறது
தூய்மைக்கான வேள்வி

பாவங்களை இறக்கி வைக்கும் படி
தோள் ஏறுகின்றன
காவடிகள்...

எனினும்
பிரகாரத் தெருவில்
அடித்து விரட்டப்படும்
பிச்சைக்காரியின்
அவல ஓலத்தில்..

அர்ச்சனைத் தட்டில்
கணக்கிடப்படும்
சில்லறைகளின்
சல சலப்பில்

அக்கினிக் குண்டத்திலிருந்து
கிளம்பி வருகிறது
நரகத்தின் வாசனை

## மகளீர் மட்டும்

மன்னிக்க வேண்டும்
மாதர்களே!
கன்னிகளை நாங்கள்
கவனிக்கவில்லையே!

புாரதி முறுக்கிய
மீசையில் பாதியை
சாதியின் பெயரால்
சிரைத்துக்கொண்டோம்..

புதுவைக்குயிலின்
இறகுகளை
விறகு வாங்கவென்று
விற்றுவிட்டோம்...

மன்னிக்க வேண்டும்
மாதுகளே!
இன்றைய பாஞ்சாலி..
இரங்கி அழுதாலும்
கண்ணனின் கைகளில்.
சேலைகள் இல்லையே...

துகிலுரியப்படுகையில்
துச்சாதனனோடு
செல்பி எடுத்துக்கொள்கின்றனர்
செல்போன் கண்ணன்கள்...

என்ன செய்வது
மாதர்களே!

எல்லா  அதிகாரங்களும்
நீல  நிறத்து  நரிகள்
ஏலம் எடுத்தாகி விட்டது...

பாதுகாக்க வேண்டிய
படையில்
புலித்தோல்   போர்த்திய
ஓநாய்க்குட்டிகள்..

ஓ
இப்போது கலிசூல்
காலமெல்லவா !
அதனால்தான்
நாகரிக நளன்கள்
மனைவிகளைப் பிரிதல்
மலிந்து விட்டது...

பொறுத்துக்கொள்ளுங்கள்
பெண்களே!
இராமர்களை உருவாக்கும்
அவசரத்தில்
இந்திரர்களை மட்டுமே
பிரசவித்து விட்டோம்....

புரட்சிப் பெண்களே!
மூட்டுக அக்கினி!
ஆண்களை முதலில்
கடக்கச் செய்யலாம்..
அதன்பின் புரட்சி
நடத்திச் செல்லலாம்.......

## பனிக் குல்லாய்

முன்பொரு நாளில்
மலை முகடுகள்
துப்பிய குளிர்காற்றில்
நம்மைத் தொலைத்தபடி
நதிகளாய்க் கலந்தோம்..

ஞாபகம் இருக்கிறதா?
எந்த இலைகளுக்கும்
வயசாகாத அந்தத் தேசத்தில்
உன் புன்னகை
பெரு விருட்சமொன்றை
எனக்குள் வரவழைக்கும்

உன் சிவப்புக்குல்லாயை
உச்சி முகர்ந்து குதூகலிக்கும்
ஹந்தானைத் தென்றல்

மகாவலிக் கரையில்
மண்ணோடு நீர் கரைந்து
மயங்கும் அதனழகில்
எங்கள் இல்லறம் பற்றி
கனாக்களை எழுதினோம்..

ஆயினும் என்ன?
காலத்தின் விருப்பப் பட்டியலில்
நிராகரிக்கப்பட்ட
என் காதல் கதையை எழுதிக்கொண்டிருக்கும்
இத்தருணத்தில்..
மேசையில் கிடந்தபடி
சிரிக்கிறது நீ பரிசளித்துப் போன
அந்தப் பனிக்குல்லாய்....

## தனிமையின் வல்லமை

தனிமைக்கு எப்போதும்
ஒரு மொழி இருக்கிறது..
இயல்புகளின் சுவற்றைச்
சுரண்டி விசித்திரக்
கோலங்களை
அது வரைந்து செல்கிறது ...

தூரத்தில் ஒலிக்கும்
சோகப் பாடலொன்றை
தனக்காய் எழுதப்பட்டதாக
உணர வைக்கவும்
சத்தமில்லாமல் சுருதிசேர்க்கவும்
சொல்லிக் கொடுக்கிறது.

பின்னிரவொன்றில் அனைவரும்
தூங்கிய நிசப்தத்தில்
சலனம் இல்லாமல் சிதைந்தழவும்
தலையணை வெப்பத்தில்
ஆறுதல் தேடவும் வாய்ப்பளிக்கிறது..

அலையில் தழுவிவரும் முத்தைப்போல
தனிமை
எந்த இலக்கியத்தையும்
வாசிக்காதவனின் உதடுகளில் கூட
ஒரு ஹைக்கூ கவிதையை
பரிசளித்துப் போகிறது...

## நாடொன்றின் ஒப்பாரி

காலம் உடைந்து துண்டு
துகள்களாய் மிதந்து
கொண்டிருந்த நாளில்
புதிய நம்பிக்கைகளைச்  சுமந்து
அவர்கள் வந்தனர்...

சுருங்கிப்  போயிருந்த
இரைப்பைகளின் மௌனத்தை
டாலர்களின் ஓசையால்
கலைத்து போட்டனர்.

எலும்புக் கூடுகள் உயிர் பெற்றதும்
தாம் பங்கிட நினைத்ததைப்
பட்டியல் போட்டனர்.

தலையினை ஒருவன்
வெட்டி எடுத்தான்.
கால்களை மற்றவன்
பிரிக்க  முயன்றான்
அயல்வீட்டுக்காரன்
குடற்கறி என்றான்.

பாகங்கள்  பிரிக்கப்பட்ட
மயானப்  பட்டறையில்
இன்னும் மிச்சமாய் இருந்தது
உணவுக்காய் சுதந்திரத்தை தொலைத்த
நாடொன்றின் ஒப்பாரி

## முகமூடி மனிதன்

கழற்ற முடியாதபடி
மனிதர்கள் முகமூடி அணிந்திருந்த நாளில்
அவனிடம் ஒரே ஒரு முகமூடி
மட்டுமே
கைவசம் இருந்தது..

கோபக்காரன் எனப் பெயர் பொறிக்கப்பட்ட
அந்த முகமூடி
அவனைச் சீண்டுபவர்களிடம் இருந்து
கொஞ்ச நாள் காப்பாற்றியது

நண்பர்களும்
மனைவியுங்கூட
அவன் முகமூடியை
அகற்றி
அவன் தூய முகத்தைத் தரிசிக்க
அச்சப்பட்டனர்..

சினத்தழும்புகளுடன்
திரியும் ஒரு நாளில்
பிறந்து
சில மாதங்களே ஆன மகளின் முத்தத்தில்
அவன் முகமூடி கழன்றது..

என்ன ஆச்சரியம் !
இப்போது அவன் முதுகில்
முளைத்து இருந்தன
தன் மகளுக்குப் பறக்கக்
கற்றுத்தர புதிய இறக்கைகள்.

## மனமெனும் தொட்டி

என்னிடமொரு தொட்டி
இருக்கிறது..
உங்கள் கவலைகள்
உங்கள் கோபங்கள்
உங்கள் வெறுப்புக்கள்
உங்கள் ஆசைகள்
எல்லாவற்றையும்
வேண்டுகோள் இல்லாமல்
விதைத்துச் செல்கிறீர்கள்
என்னுடைய தொட்டிக்குள்...

துயரத்தில் அமிழ்ந்த
அந்த சொற்களின்
சகதிக்குள் ஊறித்
தன்னை சிதைத்துக் கொள்கின்ற
ஒரு பறவையை பற்றி
யாருக்கும் எப்பொழுதும் கவலையில்லை.

தங்கள் துயரம்..
தங்கள் வாழ்வு..
தங்கள் சுதந்திரம் என்று
தொலையும் யாரிடமும்
சொல்லி விடாதீர்கள்..

என்னிடம்
எந்த கவலைகளையும்
மென்று தின்றுவிடும்
மனமெனும் தொட்டி கைவசமிருப்பதை..

## நாங்கள்

உரிமை வேண்டுமென்று
காலி முகத்திடலில்
கறுப்பு கொடி காட்டினான்
எங்கள் பூட்டன்..

அகிம்சை மறுத்ததை
ஆயுதம் தருமென்று
நம்பிப்  புறப்பட்டார்
எங்கள் தாத்தா.

காணாமல் போன
அண்ணனை மீட்க
உண்ணாவிரதம் இருக்கிறார்
தந்தை...

என் கோபத்தைக்
கவிதைகளாய் எழுதியபடி
எரிபொருளுக்காயக்
காத்து நிற்கிறேன் நான்....

## சுயம் தேடல்

எல்லாத் திசைகளிலும்
போட்டி முகாமிட்டிருக்கிறது
ஒவ்வொரு சந்தியிலும்
பொறாமை நலம் விசாரிக்கிறது..

சுயத்தை உயர்த்திப் பிடித்து விடவேண்டும்
என்ற வெறி
ஒவ்வொரு முகமூடிக்குப்
பின்னாலும் ஒளிந்திருக்கிறது..

யாரோ வீழ்ந்து கிடக்கையில்
எங்கிருந்தோ வருகிறது
ஒரு ஏளனப் புன்னகை

இந்த இருட்டுக்குள்
தேட வேண்டியிருக்கிறது
எனக்கான திசைகளை..

## நானும் அவனும்

தினமும் அவனைப்
பார்க்கிறேன்
சிறுவன்தான்,
கல்லூரி உணவகத்தில்
கையாள் உத்தியோகம்

தள்ளு வண்டியை இழுத்தபடி
மிச்ச இலைகளைச் சேகரித்து
கைகளைக் கட்டி
மௌனமாய் நிற்பான்..

அவன் உடைகளில்
பிரபஞ்சம்
கிழித்து வைத்திருக்கும்
குடுப்பத்தின் வறுமை
ஆர்ப்பாட்டம் செய்யும்

ஏதொன்றும் பேசான் !
அவன் வார்த்தைகளையும்
நல்ல விலைக்கு
வாங்கியிருப்பான்
முதலாளி

என் அருகில் வருவான்
என் எச்சில் இலையை
எடுக்க முயல்வான்
தடுமாறியபடியே
தடுப்பேன்..
புன்னகைத்தபடி பறித்துக்கொள்வான்
இலையை

நானும் பதிலுக்கு புன்னகைப்பேன்
அவனுக்குக் கொடுப்பதற்கு
புன்னகையைத் தவிர
வேறென்ன இருக்கிறது
பெறுமதியாய்
இந்தப்பிரபஞ்சத்தில்..

# விடுதிக்காரனின் டயரி

நண்பா !
உனக்கென்ன !
வீட்டுக்கு போனால்
நல்ல கறியும்
பிரியாணிச் சோறும்
உண்பதற்கு கிடைக்குமென்று
குதூகலித்து கொள்கிறாய்..

உனது வருகையை
பண்டிகையைப் போல்
வரவேற்கவும்
பலகாரம் சுட்டு அமுதூட்டவும்
ஆயிரம் உறவுகள்
காத்திருக்குமாம்.

தங்கள் ராஜகுமாரனை
மாளிகைக்கு
அழைத்துப் போவதற்காய்
நாளை காத்திருக்குமாம்
பல்சர் வண்டிகள்..

ஆயினும் நண்பா !
எனது வரவு அப்படியொன்றும்
அற்புதமானதல்ல
அவர்களுக்கு..

அன்றைய மதிய உலையில்
அரைப் படி அரிசி
அதிகமாய்க் கொதிக்கும்..
அவ்வளவுதான் !

## காணாமல் போனவர்கள்

இன்றைக்கும் இதயத்திற்குள்
எரிந்து கொண்டிருக்கிறது
நெருப்புச்சுடர்..
பன்னீரண்டாண்டுகளாய்த் தொலைந்துபோன
ஓவியங்களை அல்லவா
இன்னமும் தேடிக்கொண்டிருக்கிறோம்..

இரவின் நிசப்தத்தில்
அலறும் ஆட்காட்டிப்பறவைகள்
அறிவிக்கின்றன
அவர்கள் திரும்பமாட்டார்கள்..

அலையும் கடலில்
அசையும் நுரைகள்
தமக்குள் பேசிக்கொள்கின்றன
அவர்கள் சங்கமித்து விட்டார்கள்..

ஆயினும்,
எங்களை
அச்சங்கள் சூழும் தருணங்களிலெல்லாம்
காடுகளின் கரைகளில்
வீதிகளின் எல்லைகளில்
மலர்ந்திருக்கும் கார்த்திகை மலர்களின்
புன் சிரிப்பில்
அவர்கள்
முகம் காட்டுகிறார்கள்

## சுதந்திரம்

என் அதிகாலைகளை
ஆரம்பித்து வைக்கிறது
கிளிகளின் அலாரம்...
என் கனவுகளைப் புதுப்பித்துத் கொடுக்கிறது
வல்லூறுகளின் வேட்டை

புளினிகளின் நாதத்திலிருந்து
உருவாகிவிடுகிறது
தினமுமொரு சிறு கவிதை...

உதிர்ந்து விழுந்த
கோழி இறகொன்று
அதனசைவில் கீறிச் செல்கிறது
நாளைக்கான திசையை..

அதிகாலைத் தேநீரின்
சிறு சூட்டில் உதிர்ந்து போகின்றன
நேற்றைக்கான கவலைகள்

இந்தச் சுதந்திரத்தின்
பேரெல்லையை
பறத்தலின்
பரிபூரணத்தை
எப்படிச் சொல்வேன்
கூண்டுப் பறவைகளைத்
தினமும் கொஞ்சிக் கொண்டிருக்கும்
மகளிடம்...?

## நியாயம் – 1

கோழிக்குஞ்சை அபகரித்துச்
செல்லும் காக்கை...
தன் பிள்ளைகளுக்கு
ஒரு போதும் சொல்வதில்லை..
தான் இரை தேடிய
கொடூரத்தை!

## நியாயம் - 2

கசக்கும் ஒரு கோப்பை
தேனீரை மௌனமாய்
உறிஞ்சிக்
கொண்டிருக்கும்
நண்பனுக்கு
தெரிந்திருக்க
வாய்ப்பில்லை...
தீர்ந்து போயிருக்கும்
நம் வீட்டு சீனிப்
பேணிகளை

## விடைபெறு படலம்...

வீட்டைத் துறந்து
வெளிச்செல்லும் நாட்கள்
விசித்திரமானவை
அதிகாலைத் தேனீர்
அன்றைக்கு மட்டும்
அதிக சுவையாகும்..

பயணப் பையின் கனதி
பலகாரப் பார்சல்களால்
நிறையும்..

வாசல் வரைக்கும்
வழியனுப்பிச் சிரிப்பாள்
அன்றைக்கு மட்டும்
நேரத்துக்கு எழும்பிய
தங்கை..

எல்லோருக்குமாய்
ஒற்றைப் புன்னகையை
உதிர்த்து வண்டி ஏறுகையில்
எங்கிருந்தோ பாய்ந்து வரும்
குட்டி நாய்...

இந்த நினைவுகள்தான்
யாரும் பார்க்காமல்
மீண்டும் ஒருகணம்
வீட்டைத் திரும்பி பார்க்கச் சொல்கின்றன..
கண்களிடம்!

## முற்றத்து முருங்கைமரம்

செழித்து வளர்ந்திருந்த
முருங்கை மரத்தருகில்
முதன் முதலாய் மனிதர்கள்
குடி வந்தனர்..

அதன் இலைகளை எல்லாம்
பிடுங்கி வறுத்தனர்
காய்களை
பறித்துச் சமைத்துத் தின்றனர்..

பட்டைகளை உரித்து
சந்தையில் விற்றனர்..
அதன் வேர்களைக் கூட
கிளறி எடுத்தனர்

இல்லாமையை ஆடையாய்க்கொண்ட
அந்த மரத்தை
இப்போதெல்லாம்
அழைத்துக் கொள்கின்றனர்..

முழுவியளம் இல்லாத
முருங்கை மரமென்று..

## மீட்பர்கள்

எங்களை மகிழ்வித்தே
தீர்வதென்று அவர்கள்
பிரசன்னமானார்கள்......

சிலரின் கரங்களில்
இன்னமும் கழுவப்படாத
ஆப்கானின் இரத்தக்கறை....

சிலரின் கைகளில்
காஸ்மீரில்
வஞ்சிக்கப்பட்டவர்களின்
கண்ணீர்த்துளிகள்...

சில விழிகளில்
நூற்றாண்டுகளாய் உலகையாளும்
மமதைப் பார்வை...

எல்லோரும் வாக்களித்தனர்
எங்கள் விடுதலையின்
நிறத்தை அறிவிப்பதாய்...

மனிதச்சாம்பலை
குழந்தைகள்
பூசி விளையாடத்தொடங்கிய நாளொன்றில்
சத்தமேதுமில்லாமல் வெளியேறின
அமைதிப்புறாக்கள்..

மரணச்செய்தியை அறிவித்தபடி
வட்டமிட்ட விமானங்களில்

பொறிக்கப்பட்டிருந்த
கழுகுகளும் நட்சத்திரங்களும்
அரக்கர்களாய் உருமாறி
சனங்களின் குருதியைப்
சுவைக்கத் தொடங்கின.

## கண்ணீர்க் கனவு

மகனே!
நீ எங்கிருக்கிறாய்....
கடல் தாண்டிய தேசமொன்றில்
இன்னும் நீ உயிரோடிருப்பதாய்
கனசபைச் சோதிடர்
நேற்றும் சொல்கிறார்

தனக்குப் பிறந்த
இளையமகனில்
உனது முகம் தெரிவதாய்
அடிக்கடி உச்சரிக்கிறாள்
அக்கா.

தப்பிவந்த ஒருத்தன்
புலம்பினான்
உலங்கு வானூர்தியின்
இரும்பு முட்டையால்
பதுங்கு குழியொன்று
கல்லறை ஆனதாய்

காணாமல் போனவர்கள்
காற்றோடு கரைந்ததாய்
உன்னைக் கூட்டிப்போனவர்கள்
கதை விடுகிறார்கள்

சொல் மகனே.
எது நிஜம்?

முற்றத்தின் ஓரத்தில்

உன் நினைவாய் ஓர் மலரை
ஈன்று சிரிக்கும்
ரோஜாச்செடியின் புன்னகையில்
எப்போதும் நீ
என்னோடு தான் இருக்கிறாய்

## சுதந்திரப் பறவை

குருதிகள் சிந்தியும்
உயிர்க் கொடை அளித்தும்
எங்கள் இலட்சியத்தேரினை
இழுத்து வந்தோம்....

எங்கள் தேர்,
எங்கள் கொண்டாட்டம்,
கிடைத்திடும் இனி
சுதந்திரமென்று
கொட்டி முழங்கினோம்

முப்பது ஆண்டுகள்
இழுத்த தேர்!
பயணம்
முடிவதற்கிடையில்
அச்சு முறிந்தது.

இழுத்தவர் சிலபேர் கட்சி மாறினர்
வேடிக்கை பார்த்தவர்
நெருப்பு மூட்டினர்
செங்குருதி சொட்ட இழுத்து வந்த தேர்
கயிறறுந்து நிற்கிறது…
கைபிடிப்பார் யாருமின்றி!

## தேனூறிய சொற்கள்

இப்போதெல்லாம்
பேசத் தொடங்குவதென்பதே
பெரும் ஏற்பாடாகிற்று.
நேரில் சந்தித்தாலும்
வணக்கம் தாண்டி
வார்த்தைகள் நீள்வதில்லை.

எப்படி சுகம்?
மிக்க நலம்!
இதற்கு அப்பால்
ஒரு பிரபஞ்சத்தைப் படைக்கும்
திராணியில்லை எனக்கு.

வார்த்தை நதியில் மூழ்கியும்
மூச்சடங்கித் தொலைந்தும்
ஆழ்ந்து உரையாடுதற்குச் சிக்கவில்லை
எந்தச் சொல்லும்

பிறகென்ன! விடைபெறுகிறேனென்கிறாய்.
விடைபெற்றுச் சென்றபிறகுதான்
எங்கிருந்தோ மிதந்து வருகின்றன
தேனூறிய சொற்கள்

## ஊழி மீனின் வாழ்வு

பெருங்கடலில் சேரும்
நதிமீனின் வாழ்வெனக்கு!
வழிகள் அனைத்தும்
அடைக்கப்பட்டதாய்...
விண்மீன்கள் இரவில்
என்னை விழுங்குவதாய்...
பாதைகள் எங்கும்
முட்கள் முளைப்பதாய்...
வார்த்தைகள் எங்கும்
வலை விரிக்கப்படுவதாய்...
நம்பிக்கை தொலைத்து
நீந்தும் வாழ்வெனக்கு!
துடுப்பினை அசைக்கவும்
துள்ளிக் குதிக்கவும்
காத்திருக்கிறேன்...
ஒரு நாள்
என் முன் விரியும்
ஊழிப் பேரலையொன்றிற்காய்!

# குழந்தைகளின் வானம்

குழந்தைகளின் வானத்தில்
சந்தோச விண்மீன்கள்
புதிதாய் முளைத்தன..

கேக்குகள் வரவளைக்கப்பட்டன
பலூன்கள் ஊதப்பட்டன
மின்மினித்  துகள்களை
முகங்களில் அப்பிக்
குழந்தைகள் மகிழ்ந்தனர்

புதிய பாடலொன்றை
உதடுகளில்  உமிழ்ந்தபடி
சிறுவர்களின் கால்கள்
குதூகலிக்கத் தொடங்கின...

அன்றைய பகலில்
பரிசுகளாலும்
பட்சணங்களாலும்
நிரம்பிவழிந்தன
குழந்தைகளின் சட்டைப்பைகள்

மாலையில்
வெறிச்சோடிப்போயிற்று
அவர்களின் வானம்!
பலூன்கள் அனைத்தும் வெடித்து
முடிந்தன!
கேக்குகள் அனைத்தும் தீர்ந்து போயின
விடைபெற்றுக் கொண்டது
மகிழ்ச்சியும்!

குழந்தைகள்...?

## மாஜி யூனியர்...

முன்பொரு நாளில்
நானொரு புரட்சிக்காரன்
வதையின் தீவிர முகங்களுக்கெதிராய்
விடுதலையை அறிவித்தபடி
ஏந்தி இருக்கிறேன்
தீப்பந்தம்...

சுதந்திரமாய் நடக்கவும்
சுதந்திரமாய் ஓடவும்
முடியாதபடி
கால்கள் சிதைக்கப்பட்ட நாளொன்றில்
விலங்கொன்றின் முனகலைப் போல
சிரேஷ்டர்களிடம்
விண்ணப்பித்திருக்கிறேன்
எனக்கான சுதந்திரத்தை

என் உதடுகளைப் பாட விடுங்கள்
என் கால்களை நகர அனுமதியுங்கள்
என் விலங்குகளை உடைத்துவிடுங்கள்
இப்படி
கோஷங்களை எழுப்பியபடியே
கடந்து வந்தேன்
காலப்பெருநதியை.

என்ன ஆச்சரியம்!
இப்போது
எனது கைகளும்
ஏந்தி இருக்கின்றன
சிரேஷ்டர் என்ற
அதிகாரத் தொப்பியை

எனது கரங்களும்
தயாராகின்றன
புதிய கரங்களில்
விலங்குகள் மாட்ட..

எனது மனங்களிலும்
முளைவிட்டிருக்கிறது
அதிகாரப் புளுகத்தில்
செழித்து வளர்ந்த
இரட்டைக் கொம்புகள்..

## பாவம் சுமத்தல்...

பிதாவே !
பாரங்களைச்
சுமப்பதற்கென்றே
சபிக்கப்பட்டவை
உம் தோள்கள்

தேங்காய்,
அரிசி, மரக்கறி என
எல்லா மூடைகளும்
உம் முதுகுக்குத் தாவும்..

பனியின் உறைதலிலும்
வெயிலின் உலர்தலிலும்
விடுமுறைக்கு விண்ணப்பித்ததில்லை
உம் தோள்கள்..

சிலுவை சுமந்த
தேவ குமாரனைப் போல்
இறுதி வரை கேட்கவே இல்லை
தன் பாரங்களைச்
சுமக்கச்சொல்லிப்
பிள்ளைகளிடம்..

## மழைக்காலம்

வழிகளனைத்தையும்
மூடியிருக்கிறது
மழைக்காலப்
பேரிருள்...

சகதியில் நெளிந்து
தனக்கான வழியை
இன்னும் தேடிக்கொண்டிருக்கின்றன
சிறு நத்தைகள்
திசைகளைத் தொலைத்த இரவில்
கூகைகளிடும் கூச்சலில்
கரைந்து போகின்றன
மழை பற்றிய கவிதைகள்

எந்த மின்னலும்
இல்லாத நள்ளிரவில்
பறந்து வரும்
சிறு மின்மினியின்
ஒளிச்சிதறல்
உணர்த்தி விடுகிறது
பேரிருளுக்குள்ளும்
வாழ்வுக்கான வழிக்குறிப்பை...

## மாறுதல்

வெளிநாட்டிலிருந்து
பலநாள் கழித்து
வீட்டுக்கு வரும் அப்பாவை
யாருக்கும் இன்னமும்
அடையாளம் தெரியவில்லை

தாடி அடர்ந்து
கண்கள் குளமாகி
உருவம் சிதைந்து
தன்னைத் தொலைத்து
மீள் திரும்பும்
வாழ்வைப் புன்னகைத்தபடி...
எதிர்கொள்ளும்...
அப்பாவை வியப்புடன்
வாசலோராமாய் ஒளிந்து நின்று பார்க்கின்றோம்.

ஒரே பார்வையில்
கண்டறிந்து
வாலாட்டி
காலடியில் போய்
கொஞ்சி
குலாவிக் கொண்டிருக்கிறது
அயல் வீட்டு நாய்க்குட்டி...

## எனது கிளியின் கடைசி இரவு

அன்றைய இரவு
அப்படி எழுதப்பட்டிருக்கக் கூடாது
கறுத்தப் பூனையொன்றின்
கொடூரப் பற்களால்
கிழிக்கப்பட்டிருந்தது
எனது கவிதை

வீடு முழுவதும் சோகத்தின்
சொற்கள் நிரம்பி இருந்தன

கடைசியாய்க் கடித்த
ஆப்பிள் துண்டு
வீசப்பட்டிருந்தது அனாதையாய் வெளியே

இரத்தத் துளிகள் தெறித்த மாபிள்களில்
இன்னும் மிச்சமிருந்தது
என் செல்லப்பறவையின்
அழுகுரல்...

தினமும்
இருளின்நிசப்தத்தில்
நெற்றியில் என் முத்தம் சுமந்தபடி
நினைவு வானில் மெதுமெதுவாய்ச்
சிறகடித்துப் பறக்கிறது
எனது பறவை!

## சுந்தரன் வருவானோ?

பதிகம் பாடி பாலகன் மீட்ட
சுந்தரமூர்த்தியே..
சீக்கிரம் வருக !
நந்திகடலில் தொலைந்த புதல்வர்களுக்காய்
இன்னும் நடுரோட்டில் தொடர்கிறது
தாய்மாரின் யாகம்

தொந்திப் பிள்ளையாரும்
தேரேறும் முருகனும்
வெம்பி அழுதும்
அவர்களுக்கு வரமேதும் கொடுக்கவில்லை..

நம்பி !
நமச்சிவாயனைப் போற்றிப் பாடு!
உன் பதிகத்திலாவது
எங்கள் குழந்தைகளை
அதிகார முதலைகள்
துப்புமா பார்ப்போம்?

## கனவில் உதிரும் வாழ்வு

பல நாள் கழித்து
ஊர் திரும்பும் பறவையின்
நினைவில் வந்தமர்கின்றன...
மழையில் நனைந்த
கண்ணீர்ச் சுவரொட்டிகளும்
நினைவில் கலைய மறுக்கும்
விசேஷ உருவங்களும்!

சர்க்கரைப் பூசணிகளின்
தலைபிளக்கப்பட்டுப் பூசப்பட்ட
குங்குமக் குருதியில் அச்சம் பரவி அலைகிறது
தெருவெங்கும்!
பலி பற்றிய பயத்தில் இருளில்
ஒடுங்கிப் போயிருக்கிறது
ஊர் முழுவதும்!

தென்னம்பாளைகளை
பிளந்து கட்டிய பாடைகள்
தெருவெங்கும் உதிர்த்துப்போகும்
வர்ணக் கடுதாசிகள்
மழைத்தூறலில் கரைந்து
வரைந்து கொள்கின்றன,
நிச்சயமின்மையின் கொடூரத்தை
ஊர் முழுக்க அலைந்துதிரியும்
ஆவிக் கதைகளை
முழுவதுமாய் மறந்து விட்ட பறவை
மரணத்துக்குப் பிறகான
தன் வாழ்வைப் பற்றிய நினைவில்
உதிர்த்து எறிகிறது
அன்றைய நாளின் கணக்கை...

## சுவரும் குழந்தைகளும்

தனிமையின் கூடாரத்தில்
குழந்தைகள் சிறைவைக்கப்பட்ட
நாளொன்றில் அவர்களிடம்
ஒரு சுவர் இருந்தது..

விதம் விதமாய் குழந்தைகள்
ஓவியங்களை வரைந்தார்கள்.
குழந்தைகளைக்
கண்டித்தவர்கள்
குழந்தைகளை ஏசியவர்கள்
சில வேளைகளில்,
முறைத்தவர்களின் பெயர்களும்
கிறுக்கப்பட்டிருந்தன
அந்தச் சுவரில்.

பிள்ளைகள்
தங்களை ஒப்படைத்துப்போன
அம்மாக்களின் நினைவாக
முகங்களையும் கால்களையும்
ஒல்லிக்கோடுகளால் குறித்துக்கொண்டனர்.

ஓர் நாள்,
துயரத்தின் சாட்சியாய்க்
கிறுக்கப்பட்டிருந்த
அனைத்துக் கோடுகளும்
வெள்ளை தீட்டப்பட்டன
இனி
எந்த கிறுக்கல்களும்
இடம்பெறக்கூடாதென

அச்சுறுத்தியது
அறிவித்தற்பலகையும்...

யாரும் கவனிக்கவேயில்லை
குழந்தைகள்
இன்னும் வரையத்தொடங்கியிராத
கோடுகளையும்
ஓவியங்களையும்...

## தீபாவளிக் குறிப்புக்கள்

தீபங்களை ஏற்றிவைத்து
கண்ணனுக்காகக்
காத்திருக்கிறாள் அம்மா...

புள்ளி வைத்த கோலங்களை மிதித்து
கோபாலனின் பாதங்கள்
பதியுமொருநாளில்
நரகாசுரனின் கொடூரப்பற்கள்
பூமியில் புரள்வதாய்
தினமும் கனவு காண்கிறாள்

மத்தாப்புகளிலிருந்து சிதறும்
நெருப்பு விசிறல்களின்
வண்ணமயத்தில்
ஒவ்வொரு தீபாவளிக்கும்
வீட்டிக்குள்ளிருந்து விம்மிக் கசிகின்றன
கண்ணனுக்கான நினைவுகள்

யாருக்கும் இன்னமும்
தைரியமில்லை
அம்மாவிடம் போய்ச் சொல்ல..
நந்திக்கடற் பெருவெளியில்
மண்டானால் தாக்குண்ட
கடல்நண்டைப் போல
கண்ணன் யாருக்கும்
தெரியாமல் கொல்லப்பட்டிருந்ததை...

## விமோசனம்

பிறந்தநாளில்
தன்னை அலங்கரித்துக்கொள்ள நினைக்கும்
சேரிக்குழந்தை
சிதறுண்டு கிடக்கும் கடதாசிப் பூக்களை
சூடிப் பார்க்கிறாள்...

கலர் கலராய் வீதியில்
சிதறுண்டு கிடக்கும்
கடதாசிப் பூக்களில்
இப்பொழுதுதான்
அமர்ந்து கொள்கின்றன
வண்ணத்துப் பூச்சிகள்

## நிறைசூல் உண்டியல்

தோழனே !
உனது தந்தையும்
எனது தந்தையும்
ஒவ்வொரு ஆண்டும் வாங்கித்தருகிறார்கள்
புதிய உண்டியல்களை

நிறங்களில் ஜொலிக்கும்
புதிய உண்டியல்களை
வருடம் முழுவதும்
நிரப்பி கொள்கிறோம்
அவரவர் கனவுகளால்

ஆண்டின் நிறைவில்
நிறைசூலாகியிருக்கும் உண்டியல்களுடன்
நீ நகர்ந்துகொண்டிருக்கிறாய்
புதிய சட்டைகளை
வாங்குவதற்காய்..

அம்மாவின் செலவுக்கும்
அப்பாவின் மருந்துக்குமென
அவசரத்தில் உடைக்கப்பட்ட
எனது உண்டியல்
கவனிக்கப்படாமல் கிடக்கிறது
கொல்லைப்புறத்தில்.. அந்தோ!

## ஒரு நாட் பூ

01. பூ மலர்கிறது
இன்னும் கண் விழிக்கவில்லை இதழ்கள்
நீரூறிய வேர்கள் தட்டிக்கொடுக்கின்றன மௌனமாய்
காற்று போர்த்திப்போகிறது
பாராட்டுச்சால்வையொன்றை
புது மலருக்கு

பூ புன்னகைகிறது
நறுமணம் பரவுகிறது
கவிஞர்களின் எழுதுகோல்களை
மைக்குப்பிகள் நிரப்பிக்கொள்கின்றன
விரிந்த இதழ்களில் ஆலிங்கணிக்கும்
வண்டுகளின் தேகத்தில் ஒட்டிக்கொள்கிறது
நறுமணம்

நேரம் கடக்கிறது
களையிழந்து உதிர்கிறது மலர்
வண்டுகளும் காற்றும் கவிஞர்களும் நினைவு
வைத்துகொள்கின்றனர்
மலரின் ஓர் நாளை....

02. எதன் மீதும் பிடிப்பற்ற
வாழ்வை இறகுகளால்
தைத்துக் கொள்கிறது மனம்

நடந்து போகும் பாதையில்
நடப்பட்டிருக்கும் ஆணிகளின்
முனைகளில்
வடிந்து கொண்டிருக்கிறது

ஏமாற்றத்தின் குருதி
மிச்சமிருக்கும் நாட்களில்
வேண்டுவதெல்லாம்
மகிழ்ச்சியாய்
சிறுமலரோடு புன்னகைப்பதும்
பூவின் இதழாய்
மாறி விடுவதும் தான்..

## சிறுவர் தினத்தன்று

சிறுவர் தினத்தன்று
குழந்தைகளின் வானத்தில்
சந்தோச விண்மீன்கள்
புதிதாய் முளைத்தன..

கேக்குகள் வரவளைக்கப்பட்டன
பலூன்கள் ஊதப்பட்டன
மின்மினித் துகள்களை
முகங்களில் அப்பி மகிழ்ந்தனர் குழந்தைகள்

புதிய பாடலொன்றை
உதடுகளில் உமிந்தபடி
சிறுவர்களின் கால்கள்
குதூகலிக்கத் தொடங்கின...

அன்றைய பகலில்
பட்சணங்களாலும்
பரிசுகளாலும் நிரம்பிவழிந்தன
சிறார்களின் சட்டைகள்

மாலையில்
வெறிச்சோடிப்போயிற்று
அவர்களின் வானம்
பலூன்கள் அனைத்தும் வெடித்துமுடிந்தன
கேக்குகள் அனைத்தும் தீர்ந்து போயின
விடைபெற்றுக் கொண்டனர்
மகிழ்ச்சியும் மக்களும்
அடுத்த வருடம்
மீண்டும் நட்சத்திரங்கள் பூக்கும்....!
மீண்டும் குழந்தைகள்
மகிழ்வார்கள்..!



இது வில்வரசனின் முதலாவது கவிதைத் தொகுப்பு. அவரை என் வகுப்பில் அமரும் மாணவனாகத்தான் முதலில் நான் அறிவேன். இளம் பேச்சாளராகவே பல்கலைக்குள் அவர் தொடக்கத்திலே முகங்காட்டினார். பின் மென்மெல அவரது கவிதை முகம் மலரத் தொடங்கியது. சமூக வலைத்தளங்கள் அம்முகம் காட்டும் கண்ணாடிகளாயின. போரின் கலப்பை உழுது, மறுக்குழவு செய்த நிலத்துக்குச் சொந்தக்காரன் வில்வரசன். அது 'செம்'புலப் 'பெயல்' நீராலும் கண்ணீராலும் வளம் அனைத்தும் தொலைத்த மண். இன்று வியர்வையால் முன்னை இழந்த பெருமையை மீளப்பெறத் துடிப்பதொரு மண். இந்த மண்ணின் சாட்சியாகத் தன் தமிழைத் தருகிறார் இக்கவிஞர். இன்று இவர் நிற்பது, நடப்பது எல்லாம் பேராதனை எனும் குறிஞ்சியிலேதான். வளமார் குறிஞ்சியில் வாழ்வுறினும் கவிதையைத் தொடுகிறது போர்ப் பாலையான பசியுறுநிலம்.

- பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன்